**சமச்சீர் கல்வி சுற்றறிக்கை – 1 / 2009**

**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006**

ந.க. எண். 16142 / ஈ2 / 2006, நாள் 23.09.2009

பொருள் : சமச்சீர் கல்வி – 1 முதல் 10 வரை வகுப்புகளுக்கு புதிய பாடப்புத்தகங்கள் எழுதுவதற்கான கல்வி வல்லுநர் குழுக்களை தெரிவு செய்தல் – சார்பு.

... ... ...

தமிழகத்தில் சமச்சீர் கல்வி அறிமுகப்படுத்துவதன் முதல் கட்டமாக 1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கும், இரண்டாம் கட்டமாக 2, 3, 4, 5, 7, 8, 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கும் புதிய பாடநூல்கள் தயாரிக்கப்பட உள்ளன. இப்பாடநூல்களை எழுதுவதற்கு தகுதியும், திறமையும் வாய்ந்த தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியர் வழியாக அனுப்பிடுதல் வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய தொடக்க நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், உதவி பெறும் தனியார் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் மற்றும் ஓரியண்டல் பள்ளிகளில் பணிபுரியும் முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரி சாலை, சென்னை–600 006** என்ற முகவரிக்கு அனுப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பும் உறையின் மீது **புதிய பாடப்புத்தகங்கள் எழுதுவதற்கான விண்ணப்பங்கள்** என்று குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் பாடபுத்தகங்கள் எழுத வாய்ப்புகள் வழங்கப்படும். **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 05.10.2009–க்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.**

**புத்தகம் எழுத தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விதிகளின்படி மதிப்பூதியம் மற்றும் பயணப்படிகள் வழங்கப்படும். புத்தகம் எழுதி முடிப்பதற்கான காலம் முழுவதும் சம்பந்தப்பட்ட இயக்ககத்தின் மூலமாக அயற்பணியாக (On Duty) கருதி ஆணை வழங்கப்படும். புத்தகங்களில் அவர்களின் பெயர் இடம்பெற்றிருக்கும். மேலும் அவர்களுக்கு புத்தகங்கள் தயாரிக்கும் பணியில் சிறப்பாக செயல்பட்டமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.**

இக்கடிதத்தினை முதன்மைக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள், ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆய்வாளர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் உடன் அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொருள் சார்ந்து மேலும் விவரங்கள் தேவையெனில் கீழ்க்கண்ட ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

1. திருமதி. B. ஈஸ்வரி, உதவிப் பேராசிரியை, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை–600 006. அலைபேசி எண். 94449 29142
2. திருமதி. K. மஞ்சுளா, உதவிப் பேராசிரியை, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை–600 006. அலைபேசி எண். 98412 98425
3. திரு. N. சத்தி, உதவிப் பேராசிரியர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை–600 006. அலைபேசி எண். 94445 20311

பாடப்புத்தகங்கள் எழுதுவதற்கு வாய்ப்பு கோரும் விண்ணப்பப் படிவம் www.pallikalvi.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இணைப்பு : விண்ணப்ப படிவம்

**இயக்குநருக்காக**

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்.
3. அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.
4. ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆய்வாளர்.

நகல்

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6.
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
3. இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.

} தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் கனிவுடன் அனுப்பப்படுகிறது

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம்,
சென்னை – 600 006.

**பாடப்புத்தகங்கள் எழுத வாய்ப்பு கோரும் விண்ணப்ப படிவம்**

1. முதல்வர் / தலைமை ஆசிரியர் / ஆசிரியர் பெயர் :

2. அலுவலக முகவரி
(தொலைபேசி மற்றும் அலைபேசி எண்களுடன்) :

3. பாடபுத்தகம் எழுத விரும்பும் வகுப்பு :

4. பாடத்தின் பெயர்
(தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வரலாறு, புவியியல்) :

5. பணி அனுபவம் :

6. எந்த மொழியில் பாடபுத்தகம் எழுதும் திறமை பெற்றவர்
(தமிழ், ஆங்கிலம், உருது, மலையாளம், கன்னடம், தெலுங்கு) :

7. பாடபுத்தகம் எழுத விரும்பும் வகுப்பு :

8. இதற்கு முன்பு புத்தகம் எழுதிய அனுபவம் இருக்கிறதா ? இருந்தால் புத்தகத்தின் தலைப்பு மற்றும் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்ற விவரம். :

**முதல்வர் / தலைமை ஆசிரியர் / ஆசிரியர் கையொப்பம்**